SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY

Centre for
Research on
Successful Ageing

செய்திக்கடிதம்-இதழ் 06 நவம்பர் 2021

வெற்றிகரமான மூப்படைதல் பற்றிய ஆராய்ச்சி நிலையத்தின் (ROSA) செய்திக்கடிதத்தின் இவ்விதழில், சிங்கப்பூரில் நிலவிய கோவிட்-19 சூழலைக் குறித்து ஆகஸ்ட் 2021-இல் பெறப்பட்ட பல முக்கியக் கண்டுபிடிப்புகளை நாங்கள் முன்வைக்கிறோம், அத்துடன் ROSA குழுவின் மேலும் இரண்டு உறுப்பினர்களையும் அறிமுகப்படுத்துகிறோம்.

## ROSA புதுப்பிப்புச் செய்திகள்

ROSA குழு ஜூலை மாதத்தில் வயதான பெரியவர்களிடையே நிலவிய கோவிட் -19 தடுப்பூசிப் போக்குகள் பற்றி வெளியிட்ட அறிக்கை, அதிக கவனத்தைப் பெற்றது. தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், சேனல் நியூஸ் ஏசியா, தி நியூ பேப்பர் மற்றும் பல ஊடகங்கள் அதை எடுத்தாண்டிருந்தன. அக்கண்டுபிடிப்புகள் பல-அமைச்சகப் பணிக்குழுவுக்கும் நேரடியாகத் தெரிவிக்கப்பட்டது, மேலும் இது அரசாங்கத்தின் அடுத்தடுத்த தடுப்பூசி முயற்சிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக நாங்கள் நம்புகிறோம்.

எங்கள் பணிக்குத் தொடர்ந்து ஆதரவளித்த Singapore Life Panel® (SLP)-க்கு மீண்டும் ஒருமுறை நன்றி சொல்ல இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். சிங்கப்பூரில் உள்ள மூப்படைந்தவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தத் தேவையுள்ள முக்கியமான பரிந்துரைகளை எங்களால் SLP-யின் ஆதரவு இல்லாமல் செய்ய முடியாது. உங்கள் ஆதரவைப் பெரிதும் பாராட்டுகிறோம்!

நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது, கோவிட்-19-ஐ ஒரு தொற்றுநோயாக நடத்தும் வகையில் மாறுவதற்கான உங்கள் அனுபவங்களைப் புரிந்துகொள்ளும் கேள்விகளை வரும் மாதங்களில் எதிர்பார்க்கலாம். மேலும், இந்தக் காலக்கட்டத்தில் வயதானவர்களுக்குப் பொருத்தமான ஆதரவை வழங்குவதில் அமைச்சகங்களுக்கு வழிகாட்டும் முயற்சியில் நீங்கள் தொடர்ந்து எங்களுக்கு ஆதரவளிப்பீர்கள் என்று நம்புகிறோம்!

## ROSA ஊழியர் அம்சங்கள்

எங்கள் அணியின் மேலும் இரண்டு மதிப்புமிக்க உறுப்பினர்களான கிரேஸ் சியோங் மற்றும் ஷாமா அலி ஆகியோரை அறிமுகப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம்!



ROSA ஆராய்ச்சி உதவியாளராகிய கிரேஸ் சியோங், தன்னுடைய விடுமுறையின் போது போர்ச்சுக்கலில் உள்ள லிஸ்பனில் எடுத்த படம்! (கோவிட் சூழலுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்)

கிரேஸ் ஆகஸ்ட் 2020-இல் ROSA குழுவில் ஓர் ஆராய்ச்சி உதவியாளராகச் சேர்ந்தார். மையத்திற்கான மொழிபெயர்ப்பியல் ஆராய்ச்சிக் குழுவின் ஓர் உறுப்பினராக, ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சுருக்கங்களைப் பகுப்பாய்வு செய்து வரைவு தயாரித்தல் மற்றும் மாதாந்திரக் கணக்கெடுப்புகளை மெருகேற்றம் செய்ய உதவுவது ஆகியவை கிரேஸின் வழக்கமான வேலைநாளில் அடங்கும். ROSA-வின் ஓர் அங்கமாக இருப்பதை அவர் மிகவும் மகிழ்கிறார், ஏனெனில் இது அர்த்தமுள்ள சமூக மாற்றத்தை ஏற்படுத்தியதோடு வயதான பெரியவர்களின் நல்வாழ்வைப் பற்றிய அறிவு முன்னேற்றத்திற்கும் பங்களிக்கிறது. ஓய்வு நேரத்தில், கிரேஸ் தனது 'பைக்'கைப் பூங்காப் பாதைகளில் ஓட்டி 'பாட்காஸ்ட்'களைக் கேட்பார்.



ROSA-வின் தரவு நிரலாக்குநராகிய ஷாமா அலி, ஒரு விடுமுறையின்போது தாய்லாந்தில் ஓர் அற்புதமான தருணத்தை அனுபவிக்கிறார்! (கோவிட் சூழலுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்)

ஷாமாவும் ஆகஸ்ட் 2020-இல் ROSA -வில் தரவு நிரலாக்குநராகச் சேர்ந்தார். அவரது பணி தரவு சேகரிப்பின் தொழில்நுட்ப அம்சங்களைக் கையாள்வது மற்றும் மையத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வது ஆகியனவாகும். ROSA குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் மதிக்கப்படுகிறார்கள் மற்றும் பாராட்டப்படுகிறார்கள், ஒருவருக்கொருவர் நட்பாகவும் மரியாதையாகவும் இருக்கும் ஒரு குழுவுடன் பணிபுரியும் வாய்ப்பை அவர் மகிழ்ந்து அனுபவிக்கிறார்! வயதான சிங்கப்பூரர்கள் வெற்றிகரமாக மூப்படைவதற்குப் பங்களிப்பதில் பெரும் நோக்கத்தையும் திருப்தியையும் அவர் உணர்கிறார்.

ஷாமாவின் சில பொழுதுபோக்குகளில் உடலுறுதி பேணல் மற்றும் சமையல் செய்தல் ஆகியவை அடங்கும்! தனது ஓய்வு நேரத்தில், அவர் ஓடுவதற்காக வெளியே செல்ல விரும்புவார், சமையலறையில் புதிய சமையல் மற்றும் சமையல் குறிப்புகளை முயற்சி செய்ய எப்போதும் தயாராக இருக்கிறார். மற்றவர்களைப் போலவே, அவரும் Netflix-இல் தனக்குப் பிடித்த நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்கிறார், மேலும் தன் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுவதை மிகவும் ரசிக்கிறார். ROSA-வில் சேருவதற்கு முன்பு அவர் சிங்கப்பூரில் தனது சொந்த இந்திய உணவகத்தை நடத்தி வந்தார். தொற்றுநோய் முடிவடைந்ததும் ஷாமாவின் சமையலைச் சுவைக்கவும் நேரில் சந்திக்கவும் ROSA குழு காத்திருக்கிறது.

## ஆராய்ச்சியின் சிறப்பம்சங்கள்

ஆகஸ்ட் 2021 இல், தற்போதைய கோவிட்-19 தொற்றுநோய் தொடர்பான பல்வேறு கேள்விகளைக் கேட்டோம். எங்கள் SLP பதிலளிப்பாளர்களில் பெரும்பாலோர் (94.29%) கோவிட் -19 க்கு எதிராக முழுமையாக அல்லது பகுதியாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர், ஒரு சிறு பகுதியினர் (2.02%) மட்டுமே தடுப்பூசி போட மாட்டோம் என்று குறிப்பிட்டனர்.




*படம் 1. தடுப்பூசி போடுவதற்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்ட பதிலளிப்பாளர்களின் விகிதம். (குறிப்பு: கூடுதல் சதவீதம் 100% க்கும் அதிகமாக உள்ளது, ஏனெனில் பதிலளித்தவர்கள் தங்களுக்குப் பொருந்தும் அனைத்து விருப்பங்களையும் தேர்வுசெய்ய அனுமதிக்கப்பட்டனர்.)*

படம் 1 இல் காட்டப்பட்டுள்ளபடி, தடுப்பூசி போடுவதற்குப் பதிலளிப்பாளர்களைச் சமாதானப்படுத்திய மூன்று பொதுவான காரணங்கள் பின்வருபவை: கோவிட் -19 நோயால் பாதிக்கப்படுவதற்கான குறைவான அச்சத்துடன் வெளியே செல்ல முடியும், தடுப்பூசி மற்றவர்களுக்கு கோவிட் -19 நோய்த்தொற்று ஏற்படும் அபாயத்தைக் குறைக்கும். அதோடு , தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளவை என்று அறிவித்த அமைச்சக அதிகாரிகளின்மீது மிகுந்த நம்பிக்கையைக் கொண்டதால் அவர்கள் தடுப்பூசியை எடுத்தனர்.

தடுப்பூசி போடுவதில் சமூகப் பொறுப்புணர்வு மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும் எங்களின் பல பதிலளிப்பாளர்களைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தடுப்பூசிக்கான மதிப்புயர்த்து ஏற்றுகள் (பூஸ்டர் ஷாட்ஸ்) 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர்களுக்குக் கிடைக்கின்றன என்பதால், எங்கள் பதிலளிப்பாளர்கள் (அவர்களால் முடியுமெனில்) அவ்வூசிக்குப் பதிவுசெய்து அதனைப் போட்டுக்கொள்ள ஊக்குவிக்கிறோம். அதேபோல் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களை ஊக்குவிக்கவும் வேண்டுகிறோம்.




*படம் 2: அந்தந்தக் கூற்றுகளுடன் ஒப்புக் கொண்ட (குறைவான ஒப்புகை, ஒப்புகை அல்லது வலுவான ஒப்புகை) பதிலளிப்பாளர்களின் விகிதம்*

ஆகஸ்ட் மாதத்தில் சிங்கப்பூர் வேறுபட்ட பாதுகாப்பு மேலாண்மை நடவடிக்கைகளை (SMMs) அறிமுகப்படுத்தியதால், எங்கள் SLP பதிலளிப்பாளர்களிடம் இதுபோன்ற வேறுபட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதில் அவர்களுடைய உடன்பாட்டைப் பற்றி கேட்டோம். எங்கள் பதிலளிப்பாளர்களில் பெரும்பாலோர் (88.37%) SMM-களைச் செயல்படுத்த ஒப்புக்கொண்டனர். படம் 2-இல் காட்டப்பட்டுள்ளபடி, SMM-களுக்கான ஒட்டுமொத்த உணர்வுகள் நேர்மறையானவை, 92.35% பதிலளிப்பாளர்கள் பரந்துபட்ட சமூகத்தைப் பாதுகாக்க அது அவசியம் என்று ஒப்புக்கொண்டனர். மேலும், தடுப்பூசி போடாதவர்களுக்கு அதே சலுகைகள் நீட்டிக்கப்படக்கூடாது என பதிலளித்தவர்களில் 77% ஒப்புக்கொண்டனர்.

முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட தனிநபர்கள் பரந்த அளவிலான நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்றாலும், நாம் முழு மனநிறைவுடன் இருக்க முடியாது. நடைமுறையில் உள்ள மற்றப் பாதுகாப்பு மேலாண்மை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். அனைவரின் ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சிகள் மூலம் நிலைமை விரைவில் சீராகும் என்று நம்புகிறோம். மேலும், கோவிட்டைத் தொற்றுநோயாக நடத்துவதற்கு நாம் கற்றுக்கொள்வோம்.

## கருத்தாய்வுகளின் தேதிகள்

- **நவம்பர் கருத்தாய்வு: 1 - 24 நவம்பர் 2021**
- **டிசம்பர் கருத்தாய்வு: 1 - 26 டிசம்பர் 2021**
- **ஜனவரி கருத்தாய்வு: 1 - 24 ஜனவரி 2022**

## எங்களைத் தொடர்புகொள்ள

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வகையில் உதவி தேவையென்றால் அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கருத்துகளோ இருந்தால், தயவுசெய்து 6808 7910 என்ற எங்களுடைய நிலையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது slp@smu.edu.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துகளைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY